செ.வெ.எண். 40 நாள். 25.05.2026

**செய்தி வெளியீடு**

தேனி மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் உள்ள அனைத்து வட்டாரங்களில் காலியாக உள்ள சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் **(Community Bank Co-Ordinator)** பணிக்கு முற்றிலும் தற்காலிகமாக ஊக்கத்தொகை அடிப்படையில் பணிபுரிய தகுதியுடைய பெண் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம்.

சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் **(Community Bank Co-Ordinator)** பதவிக்கு விண்ணப்பிக்க 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழ் மற்றும் ஆங்கிலம் நன்றாக எழுதப் படிக்க மற்றும் கணக்கிடும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும். மலைப்பகுதிகளில் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற நபர்கள் இல்லாத நிலையில் 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இதர தகுதிகளுடன் இருப்பின் மாவட்ட ஆட்சியரின் சிறப்பு அனுமதியுடன் தகுதியுடையவர்களாக கருதப்படுவர்.

ஊராட்சிஅளவிலான கூட்டமைப்பில் 35 வயதுக்குட்பட்ட பெண் சுய உதவிக்குழு உறுப்பினராக இருத்தல் வேண்டும். சுய உதவிக்குழு ஊக்குநராக குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் பணியாற்றி இருக்கவேண்டும். விண்ணப்பிக்கும் வட்டாரத்தில் குடியிருப்பவராக இருக்க வேண்டும். சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் பணிக்கு தேர்வு செய்யப்படும் நபர் சமுதாயம் சார்ந்த அமைப்பு பணியாளராகவோ அல்லது தனிநபர் நிறுவனங்களில் முழுநேரப் பணியாளராக பணி இருத்தல் கூடாது.

மக்கள் நிலை ஆய்வால் கண்டறியப்பட்ட இலக்கு மக்களாக இருத்தல் வேண்டும். (உரியதகுதிகளுடன் இலக்கு மக்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் பிற விண்ணப்பதாரர்களை கருத்தில் கொள்ளலாம்). மலைப் பகுதியிலுள்ள ஆதிவாசிகள் குடியிருப்புகளில் மேற்கூறிய உறுப்பினர் இல்லாத நிலையில் ஆண் உறுப்பினர் மாவட்ட ஆட்சித்தலைவரின் சிறப்பு ஒப்புதலுடன் தேர்வுசெய்யப்படுவர்.

விண்ணப்பங்களை திட்ட இயக்குநர் / இணை இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேனி ஒருங்கிணைந்த அலுவலக வளாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தரைத்தளம், தேனி என்ற முகவரிக்கு 29.05.2026 மாலை 5.30 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ள இயலாது. இதற்கான நேரடி தேர்வும் மேற்குறிப்பிட்ட அலுலகத்திலேயே நடைபெறும். மேலும், இதுதொடர்பான கூடுதல் விபரங்களை மகளிர் திட்ட அலுவலகத்தில் பணிநாட்களில் மட்டும் (மாலை 6.00மணிக்குள்) நேரில் சென்று பெற்றிடலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**